தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | **35/2024** | சாட்சியம் | **:** | **MW1** |
| **Name** | **:** | திருமதி.கண்ணாத்தாள் | | | |
| **Date** | **:** | **20.02.2026** | | | |
| **Time** | **:** | **10.53 a.m to 11.31 a.m** | | | |

நி.த.சா.**1.**திருமதி.கண்ணாத்தாள் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை

எங்கள் நிறுவனம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது என்றால் 1994 க்கு முன்னர் தொடங்கப்பட்டது. நான் தற்சமயம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் இயக்குனராக உள்ளேன். நான் இயக்குனர் என காட்ட ஆவணம் எதுவும் இதுவரை தாக்கல் செய்யவில்லை. நானும் என் மகன் உலகப்பனும் எங்கள் கம்பெனியின் இயக்குனர்களாக உள்ளோம். என்னையும் என் மகனையும் இயக்குனராக யார் நியமித்தார்கள் என்றால் ஏற்கனவே இயக்குனராக இருந்த என்னுடைய நாத்தனாரின் கணவர் திரு சோமசுந்தரம் அவர்கள் என் மகனை ஒரு இயக்குனராக நியமித்தார் என் கணவரின் மறைவுக்குப் பிறகு நான் ஒரு இயக்குனர் ஆக்கப்பட்டேன். எங்கள் நிறுவனத்தால் மனுதாரருக்கு பணி நியமன உத்தரவு வழங்கப்பட்டு உள்ளதா என்றால் நான் இயக்குனர்

ஆவதற்கு முன்னரே அவர் பணியில் இருக்கும் காரணத்தினால் அது பற்றி தெரியவில்லை. மனுதாரர் அலுவலக கோப்புகளை எடுத்துச் சென்று விட்டதாக சொல்லி உள்ளேன் என்றால் ஆமாம். அது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்க போனபோது புகாரை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. காவல்துறையினர் புகார் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது சம்பந்தமாக மேல் அதிகாரிகளுக்கு புகார் எதுவும் கொடுக்கவில்லை. மனுதாரர் அலுவலக கோப்புகள் எதையும் எடுத்துச் செல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக அதுபோன்று பொய்யான குற்றச்சாட்டு சுமத்தப்படுகிறது என்றாலும் தவறு. மனுதாரரை வேலையில் இருந்து நீக்குவதற்காக இது போன்ற பொய்யான குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது என்றால் இல்லை. மனுதாரரின் சம்பளம் அவரின் வங்கி கணக்கில் செலுத்தப்படும் என்றால் ஆமாம். தொ.சா.ஆ.**3** கடிதம் எங்கள் அலுவலகத்தால் மனுதாரருக்கு அனுப்பப்பட்டது என்றால் ஆமாம். அந்த கடிதத்துடன் சம்பளத்திற்கான காசோலை எண்.272953 ரூ.11,655/- நகல் அனுப்பப்பட்டுள்ளது என்றால் ஆமாம். காசோலையின் அசல் மனுதாரருக்கு அனுப்பப்படவில்லை அந்த தொகை அவரின் வங்கி கணக்கில் சேரவில்லை என்றால் ஆமாம். காசோலையில் உள்ளது என் மகனின் கையொப்பம் ஆகும். தொ.சா.ஆ.**4** 2-A மனு வேலை கேட்டு மனுதாரர் தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். அந்த மனுவின் கீழ் 6.11.2023 அன்று விசாரணை நடைபெறும் என

அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. எங்கள் நிறுவனம் சார்பாக சேகர் அல்லது சதீஷ் ஆகியோர் விசாரணையில் கலந்து கொண்டார். 06.11.2023 அன்று நடந்த விசாரணையின் போது தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு மனுதாரர் தனக்கு சம்பளம் வழங்கப்படவில்லை என தெரிவித்த பிறகுதான் தபால் மூலம் காசோலையுடன் கடிதத்தை மனுதாரருக்கு நாங்கள் அனுப்பினோம் என்றால் ஆமாம். எங்கள் நிறுவனத்தில் மாத சம்பளத்தை வங்கி கணக்கில் செலுத்தும் நடவடிக்கை இருக்கும் பொழுது மனுதாரர் மிரட்டுவதற்காக தான் நேரில் வந்து வாங்கிக் கொள்ளும்படி கடிதம் அனுப்பினோம் என்றால் இல்லை. என் கணவர் இறந்து ஐந்து நாட்களிலேயே தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே நான் அலுவலகத்திற்கு வந்து விட்டேன் அவ்வாறு இருக்கும் பொழுது சம்பளத்தை நிறுத்த வேண்டும் என்ற எண்ணம் எதுவும் எனக்கு இல்லை. 27.10.2023 தேதியிட்ட கடிதத்தை மனுதாரரை வரும்படி கேட்டு அனுப்பினோம் என்றால் ஆமாம் (நி.சா.ஆ.1). வேலை கேட்டு மனுதாரர் தொழிலாளர் ஆணையர் முன்பு 20.10.2023 அன்று மனு தாக்கல் செய்த பின்னர் தான் மேற்படி கடிதத்தை நாங்கள் அனுப்பினோம் என்றால் இல்லை. மனுதாரர் தாக்கல் செய்த மனு சம்பந்தமாக எங்களுக்கு தகவல் நவம்பர் 2023-ல் தான் கிடைக்கப்பெற்றது.

வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக பின் சிந்தனையுடன் 27.10.2023 தேதியிட்ட கடிதத்தை அனுப்பினோம் என்றால் இல்லை. மனுதாரர் வேலைக்கு வராதது சம்பந்தமாக குற்றச்சாட்டு குறிப்பாணை கொடுக்கப்பட்டதா என்றால் கடிதத்திலேயே தெரிவிக்கப்பட்டு இருந்தது தனியாக கொடுக்கப்படவில்லை. மனுதாரர் வேலைக்கு வராதது சம்பந்தமாக உள்துறை விசாரணை நடைபெறவில்லை. எங்கள் நிறுவனத்தில் வேலை செய்த பெண் தொழிலாளர்களான பொன்னியம்மாள், அமுதா, சகுந்தலா, ஜமுனா, நேருதாஸ் ஆகியோர் 15.07.2023 தேதியிட்ட கடிதம் மூலம் பணிகொடை கேட்டு அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் ஆமாம். மேலும் அவர்கள் பணிக்கொடை கேட்டு தொழிலாளர் ஆணையர் முன்பு வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியும். விசாரணை என்பது நாங்கள் வேலைக்கு வராத நாட்களுக்கு ஊதியம் இல்லை எனவும் மீண்டும் வேலைக்கு சேர்த்துக் கொள்ள தயாராக இருப்பதாகவும் தொழிலாளர் ஆணையர் முன் தெரிவித்தோம் என்றால் ஆமாம் ஆனால் அதனை எழுத்து மூலமாக கேட்டபோது தர மறுத்து விட்டோம் என்றால் ஆமாம். மேலும் தொழிலாளர்கள் தொடர்ந்து வேலைக்கு வந்து கொண்டிருக்கும் காரணத்தினால் தான் எழுத்து மூலமாக கொடுக்க மறுக்கிறோம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். ஆனால் மீண்டும் வேலைக்கு வரச் சொல்லி கடிதம் அனுப்பி

இருக்கிறோம். அந்த கடிதத்தின் நகல் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் ஆமாம். அந்த வழக்கு சம்பந்தமாக எங்களுக்கு அறிவிப்பு கிடைக்கப்பெற்ற பின்னர் தான் மனுதாரரை மிரட்டி பூர்த்தி செய்யாத ஆவணம் மற்றும் தாள்களில் கையெழுத்து போட்டு செல்லும்படி சொன்னோம் என்றால் இல்லை. தொழிலாளர்கள் அது போன்று பூர்த்தி செய்யாத ஆவணங்களில் கையெழுத்து போட மறுத்த பின்னர் தான் அவர்களை வேலையில் இருந்து நீக்கினோம் என்றால் வேலையில் இருந்து நீக்கவில்லை. வேலை நீக்கம் செய்வதற்கு முன்னர் அதற்கான காரணம் எதையும் நாங்கள் மனுதாரருக்கு சொல்லவில்லை என்றால் நாங்கள் வேலை நீக்கமே செய்யவில்லை. 2020 க்கு முன்னர் எங்கள் நிறுவனத்தில் சுமார் 150 பேருக்கும் மேல் வேலை செய்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. அவ்வளவு நபர்கள் வேலை செய்யவில்லை குறைவான நபர்கள் தான் வேலை செய்தார்கள். வெளிமாநிலத்தில் இருந்து வரும் தொழிலாளர்களும் எங்கள் நிறுவனத்தில் வேலை செய்து வந்தனர் என்றால் ஆமாம். உள்ளூர் தொழிலாளர்களை விட வெளிமாநிலத்தில் இருந்து வரும் தொழிலாளர்களுக்கு குறைவான ஊதியம் தான் கொடுப்போம் என்றால் வேலையை பொருத்து ஊதியம் வழங்கப்படும். வெளிமாநிலத்தில் இருந்து வரும் தொழிலாளர்களுக்கு குறைவான சம்பளம் வழங்கி அவர்களை வேலைக்கு வைத்துக் கொண்டு மனுதாரரை திட்டமிட்டு வேலையை விட்டு நிறுத்திவிட்டோம் என்றால் இல்லை. பிப்ரவரி 2024 இல்

இருந்து எங்களுடைய நிறுவனத்தை மூடிவிட்டதாக சொல்கிறோம் என்றால் ஆமாம். 100 பேருக்கு மேல் வேலை செய்யும் தொழிலாளர்கள் இருக்கும் நிறுவனத்தை மூட வேண்டும் என்றால் அரசாங்கத்திடம் உரிய அனுமதி பெற வேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் அவ்வளவு ஆட்கள் எங்கள் நிறுவனத்தில் வேலை செய்யவில்லை. எங்கள் நிறுவனத்தை மூடிய பின்னர் அது சம்பந்தமாக அரசாங்கத்திடம் உரிய அனுமதி வாங்கினோமா என்றால் மூடப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆக வேண்டும் என்று சொன்ன காரணத்தினால் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எந்த தவறும் செய்யாத மனுதாரரை பணி நீக்கம் செய்தது தவறு என்றாலும் அவருக்கு மீண்டும் வேலை வழங்கி பின் தொடர்ச்சியுடன் அனைத்து பண பயன்களும் வழங்க வேண்டும் என்றால் மனுதாரர்களின் செய்கையால் எனக்கு என்னுடைய நிறுவனத்தை சரியாக நடத்த இயலாமல் போன காரணத்தினால் மீண்டும் வேலை வழங்க இயலாது மேலும் கம்பெனி தற்சமயம் செயல்படவும் இல்லை. நிறுவனத்தை மூடுவதற்கு முன்பிருந்த ஒரு ஆண்டு காலத்தில் எத்தனை பேர் வேலை பார்த்தார்கள் என்றால் தெரியவில்லை. மூடிய சமயத்தில் 40 பேர் இருந்தார்கள் அதற்கு முன்னர் ஒரு வருடத்திற்கு முன் எத்தனை பேர் இருந்தார்கள் என சரியாக தெரியவில்லை. நிறுவனத்தை மூடவில்லை என்றாலும் தற்சமயம் வரை செயல்பட்டு தான் வருகிறது என்றாலும் மனுதாரருக்கு மீண்டும் வேலை

வழங்க வேண்டும் என்றாலும் சரியல்ல. எங்கள் நிறுவனம் செயல்பட்டு வரவில்லை என்ற காரணத்தினால் தான் ESI, EPF கணக்கில் கூட மூடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது அதற்கான ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நி.சா.ஆ.3 PF துறைக்கு அனுப்பிய கடிதம் என்றால் ஆமாம. அந்த ஆவணத்தில் தற்காலிகமாக உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதில் கம்பெனி மூடப்பட்டதாக சொல்லவில்லை என்றாலல் ஆமாம். நி.சா.ஆ.4 ESI துறைக்கு அனுப்பிய கடிதம் என்றால் ஆமாம. அந்த ஆவணத்தில் தற்காலிகமாக உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதில் கம்பெனி மூடப்பட்டதாக சொல்லவில்லை என்றால் ஆமாம். மனுப்படி உத்தரவாக வேண்டும் என்றால் சரியல்ல.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.
Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:20.02.2026